# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C. 221/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | உஷா |
| Father’s Name | : | க/பெ.தங்கவேல் |
| Village | : | மாவல்வாடி கிராமம், வந்தவாசி |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 19.05.2025.

எதிரிகள் 1, 3, 4 ஆஜரில் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2ம் எதிரி இறந்துவிட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய கூலி செய்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார். 1, 2 எதிரிகள் எனது அண்ணன்கள். 3, 4 எதிரிகள் எனது அண்ணிகள்.

கடந்த 12.03.2015ம் தேதி பகல் 2.30 மணி அளவில் எனது வீட்டு பக்கத்தில் போலிசார் விசாரித்தபோது, என்னை சண்டை நடந்த இடத்தை காட்டுமாறு சொன்னார்கள் நானும் அந்த இடத்தை காட்டினேன். அங்கு ஒரு மேப் வரைந்தார்கள். அவர்கள் எழுதியதை என்னிடம் படித்து காட்டினார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் வரைபடத்தைதான் போலிசார் அன்றைய தினம் வரைந்தார்கள். என்னுடன் தமிழ்மணி என்பவரும் கையெழுத்து போட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார். சம்பவம் நடந்தபோது நான் வீட்டில்தான் இருந்தேன் என்னையும் எதிரிகள் தாக்கினார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

இல்லை.